[28th March 1959

SRI A. A. RASHEED : May I know whether the Government are giving any subsidy to private parties for poultry farming and if so, how much?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : The Government have been giving some subsidy to private poultry farmers but about the exact amount, I would like to have notice.

Refund of earnest money to contractors

* 1033 *Q.*—SRI A. R. SUBBIAH MUDALIAR : Will the Hon. the Minister for Local Administration be pleased to state the action taken regarding the refund of the earnest money amounting to Rs. 2,80,375 deposited by contractors in the name of Tirunelveli District Board up to 31st March 1958?

THE HON. SRIMATHI LOURDHAMMAL SIMON : The Special Officer, Tirunelveli District Board, has reported that the total of earnest money deposited and security deposits repayable to contractors as on 31st March 1958, amounted to Rs. 2,04,684.

The Special Officer has been instructed to discharge the contractors' liabilities in so far as they relate to earnest money and security deposits which have accumulated up to 31st December 1958, and submit a report to Government by 25th March 1959. He has also been asked to apply for financial assistance from Government, if necessary, for the purpose.

SRI V. K. RAMASWAMY MUDALIYAR : According to figures recently placed before the Public Accounts Committee, a sum of nearly 24 lakhs of rupees is still outstanding and has to be paid to contractors. District Boards have made several representations in this regard to Government but still the matter has been delayed much. May I know when exactly these accounts will be finalized and the deposits refunded?

THE HON. SRIMATHI LOURDHAMMAL SIMON : I cannot say when exactly they will be finalized. We are trying our level best in the matter and are giving the utmost assistance. I think we have paid up to January 1959, a sum of Rs. 11,148·90 in Tirunelveli district to which the question relates. About other districts, the position will be examined.

9.00 a.m. SRI V. SUBBIAH : திருநெல்வேலி ஜில்லா போர்டினுடைய நிதி நிலைமை மிக மோசமாக இருக்கிறதென்றால், ஆறு லட்சம் ரூபாய்க்குக் குறையாமல் மான்யமாக வழங்கவேண்டுமென்று கேட்டிருந்தும், கொடுத்திருக்கும் தொகை குறைவாக இருப்பதால், ஆசிரியர்கள் சம்பளத்திற்கும், கிராமாந்திர ரோடுகள் மெயின்டினென்ஸுக்கும் இன்னும் பல தேவைகளுக்குப் பணம் தேவைப்படுகிறதென்று சொல்லி, பல தவணைகளிலே....

MR. SPEAKER : மூலக் கேள்வியானது கண்டிராக்டர்கள் செலுத்திய எர்னஸ்ட் பணத்தைத் திருப்பிக் கொடுப்பது பற்றியது. ஜில்லா போர்டிலே பணம் இருக்கிறதா, இல்லையா என்பதுபற்றியல்ல கேள்வி. தாங்கள் ஒரு சின்ன பிரசங்கம் மாதிரி கேள்வி கேட்கக் கூடாது. நேரடியாகக் கேள்வி கேட்கவேண்டும். மூலக் கேள்விக்கு சம்பந்தம் உடையதாக இருக்கவேண்டும் உபகேள்வி. கண்டிராக்டருடைய எர்னஸ்ட் பணம் திருப்பிக் கொடுப்பது பற்றித்தான் உபகேள்விகள் கேட்கலாம்.

28th March 1959]

SRI V. SUBBIAH : டிபாசிட் பணம் திருப்பிக் கொடுக்கப்படாததால், ரீபண்டு பண்ணப்படாததால், பல கிராமாந்திர ரோடுகளை ஜில்லா போர்டு கண்டிராக்டர்கள் வேலைக்கு எடுத்துக்கொள்ள முடியாத நிலை இருக்கிறதால், அவர்களுடைய பணத்தைத் திரும்பக் கொடுப்பது பற்றி அரசாங்கம் உடனடியாக நடவடிக்கை எடுக்குமா ?

THE HON. SRIMATHI LOURDHAMMAL SIMON : அதற்காகத்தான் மார்ச் 25-ந் தேதிக்குள் அங்குள்ள நிலவரங்களைப்பற்றி தகவல் கொடுக்க வேண்டும் என்று அங்குள்ள ஆபீசர்களைக் கேட்டிருக்கிறோம். அதன்படி எவ்வளவு உதவி அளிக்கவேண்டுமோ அவ்வளவு உதவி அளிக்கப்படும்.

Constitution of ex-zamin forests in the Reserved forests.

* 1034 *Q.*—SRI N. R. THIAGARAJAN (on behalf of SRI V. SANKARAN) : Will the Hon. the Minister for Home be pleased to state—

(*a*) whether the Government propose to constitute the ex-zamin forests into Reserved Forests; and

(*b*) if so, the steps taken or proposed to be taken to afforest the same?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : (*a*) Yes, Sir.

(*b*) At present, suitable areas of ex-zamin forests which are not burdened with rights, have been taken up for teak, softwood and fuel plantations under the different schemes relating to the Second Five-Year Plan.

SRI N. R. THIAGARAJAN : என்னுடைய தொகுதியில் 90 சத விகிதம் ஜமீன் பிரதேசங்களாக இருக்கின்றன. அங்கு பெரும்பாலும் காடுகள் என்று சொல்லப்படுபவை பெயரளவில் இருக்கின்றனவே தவிர, ஒரு மரம் கூட கிடையாது. ஆகவே, எக்ஸ்-ஜமீன் ஏரியாக்களை காட்டிலாகா வசம் ஒப்புவித்து, அங்கு காடு வளர்க்க தனியாக நடவடிக்கை எடுக்க முயற்சி செய்வார்களா ?

THE HON SRI M. BHAKTAVATSALAM : ஜமீன் பிராந்தியங்களிலே இருக்கும் காடுகள், கனம் அங்கத்தினர் அவர்கள் சொல்வது போல்தான் இருக்கிறது. அவைகளில் எங்கெங்கு மரங்கள் வளர்க்க முடியுமோ அங்கெல்லாம் மரங்கள் வைக்க ஏற்பாடு செய்யப்படுகிறது. குறிப்பாகச் சொல்ல வேண்டுமானால், கண்டமநாய்க்கன் ஜமீன் பகுதியில் தேக்கு மரம் நன்றாக வளரும் என்று ஏற்பட்டிருக்கிறபடியால், ஐயாயிரம் ஏக்கருக்கு மேல் தேக்கு சாகுபடிக்கு எடுத்துக்கொள்ள வேண்டுமென்று இப்பொழுது திட்டம் உருவாக்கப்பட்டிருக்கிறது. அது நிறைவேற்றப்படும்.

Bone Digester

*1035*Q.*—SRI A. VEDARATHNAM : கனம் உள் விவகார அமைச்சர் அவர்கள் தயவு செய்து பதிலளிப்பாரா :—

(அ) வேதாரண்யம் பிர்க்காவில் மருதூர் கிராமத்தில் போன் டைஜஸ்டர் பிளேயிங் சென்டர் கனம் மராமத்து இலாகா மந்திரி அவர்களால் திறப்பு விழா நடைபெற்றதா ?

(ஆ) எப்போது ?